

திருவண்ணாமலையில் தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றினார். உடன் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன், டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி, இரா.ஸ்ரீதரன், பொன்.முத்து, ஆர்.சிவானந்தம், கே.ஆர்.சீதாபதி, கே.வி.ராஜ்குமார், ஆர்.வேல்முருகன், என்.பாண்டுரங்கன், எஸ்.பன்னீர் செல்வம், க.லோகநாதன், பிரியா விஜயரங்கன், விஜயலட்சுமிரமேஷ், ஜெயராணிரவி, உட்பட பலர் உள்ளனர்.

### நம் மண்-மொழி-மானம் காக்க

# அநீதிகளுக்கு எதிராக "ஓரணியில் தமிழ்நாடு" இயக்கத்தை முன்னெடுப்போம்!

## திருவண்ணாமலை மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, ஜுலை 1 –

நம் மண், மொழி, மானம் காக்க அநீதிகளுக்கு எதிராக ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தை முன்னே டுப்போம் என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்டச் செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானங்களை விளக்கி, பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினருமான எ.வ. வேலு சிறப்புரை யாற்றி னார்.

30.06.2025 திங்கட்கி ழமை காலை 10.30 மணிக்கு, திருவண்ணா மலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன் தலைமை வகித்தார்.

சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட அவைத் தலைவர் இரா. இராஜசேகர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வடக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன்.எம்.பி., அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

செயற்குழுக் கூட்டத் தில் கலந்து கொண்டு கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினரும், பொதுப் பணி துறை அமைச்சருமான எ.வ. வேலு தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க., செயற்குழுக் கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறை வேற்றப்பட்டது.

வாராது வந்த மாமணியாம், கழகத்தின் எழுஞாயிறு, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்கள், ஜுலை13 அன்று திருவண்ணா மலை மாவட்டத்தில் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தரவுள்ளார். அவருக்கு நமது மாவட்டத்தின் எல்லையில் எழுச்சியான வரவேற்பு அளிப்பது என இந்த செயற்குழுக் கூட்டம் தீர்மானிக்கிறது.

திராவிட மாடல் அரசு, மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது. உள்ளாட்சி அமைப்புகளிலும் போட்டியின்றி மாற்றுத்திறனாளிகள் தேர்ந்தெடுக்கவும் நமது அரசு வழிவகை செய்துள்ளது.

மேலும், சிறப்பு அம்சமாக அரசு பணிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு பதவி உயர்வில் நான்கு சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கும் வகையில் அரசாணைபிறப்பித்துள்ள, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இந்த செயற்குழு நன்றியினையும், பாராட்டுதல்களையும் தெரிவித்து கொள்கிறது.

"ஓரணியில் தமிழ்நாடு என்ற கழகத் தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களின் கனவை நனவாக்கிட, நமது திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஒன்றிய, நகர, பேரூர், பகுதிக்கழகங்களின் சார்பில், ஒவ்வொரு வாக்குச்சாவடிக் குட்பட்ட பகுதியில் 30விழுக்காடு கழக வாக்காளர்களை வீடு, வீடாக சென்று சேர்த்திட வேண்டுமென இந்த செயற்குழுக் கூட்டம் தீர்மானிக்கிறது.

"ஓரணியில் தமிழ்நாடு ஜுலை 1 அன்று கழக தலைவர் அண்ணன் மு.க. ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பில் முன்னெடுப்பை அறிவிப்பார், அதை தொடர்ந்து நமது மாவட்டத்தில் செய்தியாளர்கள் சந்திப்பும், முன்னெடுப்பும் நடைபெறும்.

ஜுலை 2 அன்று நமது திருவண்ணாமலை வடக்கு, தெற்கு மாவட்டங்களில், இளைஞர்கள் அதிகஅளவில் பங்கு பெறும் பொதுக்கூட்டங்கள் நடைபெறும்.

ஜுலை 3 அன்று நமது மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரவர் சொந்த வாக்குச்சாவடிகளில் உள்ள வீடுகளுக்கு நேரில் சென்று, வாக்காளர்களை சந்தித்து, கழகத்தில் உறுப்பினராக சேர்த்திடல் வேண்டும்.

மேற்கண்ட தீர்மானங் கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

சட்டமன்ற செயற்குழுக் கூட்டத்தில் கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே. கம்பன், நாடாளுமன்ற நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒ.ஜோதி,

தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பொன்.முத்து, ஆர்.சிவானந்தம், கே.ஆர். சீதாபதி, கே.வி.ராஜ்குமார், ஆர். வேல்முருகன் மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜய ரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க.சௌந்தர ராசன், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன்,

வடக்கு மாவட்ட துணை செயலாளர்கள் க.லோகநாதன், ஜெயராணிரவி, மாவட்ட பொருளாளர் டி.ஏ.தட்சணா மூர்த்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே.வி. சேகரன், கோ.எதிரொலிமணியன், வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் ஏ.சி.மணி, கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செ ல்வம், வி.பி. அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர். சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ். சிவசேமன், க. சுப்பிரமணி, இரா. ராஜேந்திரன், ஆர்.வி.சேகர், கி. ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சுப்பிரமணியன், பி. மனோக ரன், ஏ.எழில்மாறன், கே.டி.ராமசாமி, என்.டி.மனோகரன், எஸ்.எஸ்.அன்பழகன், எம். சுந்தர், எஸ்.மோகன், து.மாமது, ஏ.ஞானவேல், என்.சங்கர், எம். தினகரன், ஜெ.கே.சீனுவாசன், ஏ. ஜி.திராவிட முருகன், எஸ்.ரவிக்குமார், கே.பி.ஆர்.பி.பழனி, சி.ஆர். பெருமாள், ப.இளங்கோவன், டி.ராதா, ஏ.சுந்தரேசன்,

தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி.கென்னடி, கு.பாலசுப்பிர மணி, கா.சு. இளங்கோவன், அன்பரசிராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.சி.வி.தயாநிதி, ஏ.எம்.காசி, எம்.கிருஷ்ண மூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர்.வெங்கடேஷ்பாபு, ஆ.மோகனவேல், ஆர். நந்தகுமார், அப்சர்லியாகத்பாஷா, தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாகள் சி.கே.அன்பு, ப.முருகையன், மு.அன்பழகன், எம்.சீனுவாசன், கோ.தனசேகர், ஆர்.முருகன், வி.வெங்கடேசன், டி. கே.மோகன், கே.கோவர்த ணன், வேணிஏழுமலை மற்றும் திருவண்ணா மலை மாநகர பகுதி செயலாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனு வாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், அணிகளின் நிர்வாகி கள், மாவட்ட பிரதிநிதிகள் உட்பட சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

நிறைவாக வடக்கு மாவட்ட துணை செயலாளர் ந.பாண்டுரங்கன் நன்றி கூறினார்.



விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றிய இளைஞர் அணி தி.மு.க சார்பில் ஏரளூர் ஊராட்சியில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் மற்றும் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் பொன் கௌதமசிகாமணி, தலைமைக் கழக பேச்சாளர் தூத்துக்குடி க.சரத்பாலா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். நிகழ்ச்சியில் ஆர்.கற்பகம், பக்தவச்சலு, பி.வி.ஆர்.சு.விசுவநாதன், செ.தினகரன், பூக்கடை கணேசன், ஓம்சிவசக்திவேல், நிர்மல்ராஜ், ஜோதி, கிருஷ்ணராஜ், சிறுவானூர் பரசுராமன், தேவா, மோகன், எம்.ஜெ.கிருஷ்ணாமூர்த்தி, சடகோபன் , காசி.விஸ்வநாதன், ஏழுமலை, மோகன்ராஜ், சுதா சினிவாசன், மாதவன், சரவணன், பாலாஜி , பிரபாகரன், உதயசூரியன், ஐயப்பன், வினோத்புகழேந்தி, விஜய், சக்கரபாணி, முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.

### ஓரணியில் தமிழ்நாடு எனும்

# தி.மு.க. உறுப்பினர் சேர்க்கும் முன்னெடுப்பு பிரச்சார பொதுக்கூட்டம்!

## கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் அறிவிப்பு!



கோவை, ஜுலை 1 -

தமிழ்நாட்டின் மண், மொழி, மானம் காக்க அனைவரையும் ஓரணியில் திரட்டுவதற்கான முயற்சியில், முதலமைச்சர், கழக தலைவர் அவர்கள் 1.07.2025 அன்று, சென்னையில் ஓரணியில் தமிழ்நாடு எனும் தி.மு.க. உறுப்பினர் சேர்க்கும் திட்டம் முன்னெடுப்பு தொடங்கி வைப்பதை அடுத்து,

மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி வழிகாட்டுதலில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில், நாளை (02.07.2025 - புதன் கிழமை) மாலை 5.30 மணியளவில், பீளமேடுபுதூர், துரை தேவராசன் திடலில், ஓரணியில் தமிழ்நாடு எனும் தி.மு.க. உறுப்பினர் சேர்க்கும் திட்டம் முன்னெடுப்பு பிரச்சார பொதுக் கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் திருமதி. ஆண்டாள் பிரியதர்ஷினி கழக செய்தி மக்கள் தொடர்பு பிரிவு,மாநில துணை தலைவர் சிறப்புரை யாற்ற உள்ளார்.

அதுசமயம் இந்நிகழ்வில், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் கணபதி ராஜ்குமார் எம்.பி., கழக சொத்துப் பாதுகாப்பு குழு துணைத் தலைவர் பொங்கலூர் நா.பழனிச்சாமி,

கோவை மாநகராட்சி மேயர் இரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகர் மாவட்ட திமுக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழக பொறுப்பாளர்கள்,

மாநகராட்சி மண்டலத் தலைவர்கள், நிலைக் குழுத் தலைவர்கள், அனைத்து சார்பு அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள்,வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், பகுதிக் கழக வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள்,கழக செயல்வீரர்கள் கழகத் தொண்டர்கள்,BLA2 பாக முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

### கன்னியாகுமரி – குளச்சல் சட்டமன்றத் தொகுதிகளில்

# "ஓரணியில் தமிழ்நாடு" புதிய உறுப்பினர் சேர்க்கைக்கான ஆலோசனைக் கூட்டம் - பயிற்சி முகாம்!

## மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது!

கன்னியாகுமரி, ஜுலை 1 -

கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட நாகர்கோவில், கன்னியாகுமரி மற்றும் குளச்சல் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற உறுப்பினர் சேர்க்கை செயலி குறித்த வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்களுக்கான (BDA) பயிற்சி கூட்டம் 29.06.2025, ஞாயிறு அன்று நாகர்கோவில் மற்றும் கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிக்கு நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமைக் கழக அலுவலகத்தில் வைத்தும், குளச்சல் சட்டமன்ற தொகுதிக்கு குளச்சல், எஸ்.பி.எம்.. ஹாலில் வைத்தும் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வாக்குச்சாவடி பொறுப்பாளர்களுக்கு உறுப்பினர் சேர்க்கைக்கென தனிப்பட்ட வகையில் உருவாக்கப்பட்டிருக்கும் அலைபேசி செயலி தொடர்பாக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளால் பயிற்சி அளிக்கப்பட்டது. கூட்டத்தில் ஒவ்வொரு பூத்களிலும் உறுப்பினர் சேர்க்கை பணிகளில் சுணக்கமின்றி ஈடுபட வேண்டும் எனவும், ஒரு பூத்தில் 30 சதவீதம் பேரை உறுப்பினர்களாக சேர்க்க வேண்டும் எனவும், தி.மு.க. அரசின் சாதனைகளை விளக்குவதற்கான நோட்டீஸ், ஸ்டிக்கர் கொண்டு சென்று உறுப்பினர் சேர்க்கை மேற்கொள்ள வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டது. ஜுலை 2ம் தேதி கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்தில் பொதுக் கூட்டத்தை நடத்துவதுடன் ஜுலை 3ம் தேதி முதல் உறுப்பினர் சேர்க்கை பணிகளை தொடங்க வேண்டும் என கூட்டத்தில் கூறப்பட்டது.

கூட்டத்தில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தொகுதி பார்வையாளர்கள் ஆனந்த், ˙ரீதர் ரொட்ரிகோ, விஜயகதிரவன், மாநில அயலக அணி துணை செயலாளர் எ.பாபு வினிபிரட், ஒன்றிய கழக செயலாளர்கள் பா.பாபு, மோ.பிராங்கிளின், த.செல்வன், பி.சற்குருகண்ணன், ஆ. லிவிங்ஸ்டன், ஏ.சுரேந்திரகுமார், பி.எஸ். பி.சந்திரா, ச.சுந்தர்சிங், நகர கழக செயலாளர்கள் என்.நாகூர்கான், குமரி ஸ்டீபன், பகுதி கழக செயலாளர்கள் இ.ஜவகர், த. ஜீவா, என்.பி.துரை, எம். சேக்மீரான் உட்பட பேரூர் கழக செயலாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி BDA ஒருங்கிணைப்பாளர்கள் குமரி மணிமாறன், ஜெமிலா, தெய்வேந்திரன், BDA வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




தென்காசி ஒருங்கிணைந்த மாவட்ட தி.மு.க சார்பில் செயற்குழு கூட்டம் தென்காசியில் உள்ள தெற்கு மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவைத் தலைவர்கள் சுந்தர மகாலிங்கம் (தெற்கு) சுப்பையா(வடக்கு)ஆகியோர் தலைமையில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் முன்னிலையில் நடைபெற்றது. தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்.எல்.ஏ.வரவேற்புரை யாற்றினார்.இந்நிகழ்வில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி உரையாற்றினார்.உடன் முன்னாள் அமைச்சர் தங்கவேலு,ராணி ஸ்ரீகுமார் எம்.பி.நௌஷாத்,கலைக் கதிரவன், கணேஷ்குமார் ஆதித்தன்,தனுஷ் எம் குமார்,முத்துப்பாண்டி,ஆறுமுகச்சாமி, செல்லத்துரை,செண்பகவிநாயகம் முத்துச்செல்வி ஆகியோர் உள்ளனர்.



தேனி தெற்கு மாவட்டம் கம்பம் தனியார் மண்டபத்தில் ஓரணியில் தமிழ்நாடு. புதிய உறுப்பினர் சேர்க்கை ஆலோசனைக் கூட்டம் தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் ராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றதுமாநில தீர்மானக் குழு இணைச் செயலாளர் ஜெயக்குமார் மாநில சிறுபான்மை நல குழு உறுப்பினர் சூர்யா தங்கராஜ். மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பாண்டியன்கம்பம் தொகுதி பொறுப்பாளர் ஜெயன். மாவட்ட துணை செயலாளர் செந்தில்.தெற்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் அதிபன் ராஜ்.தெற்கு நகர செயலாளர் பால்பாண்டி ராஜா.பொதுக்குழு உறுப்பினர் தக்காளி அக்கீம்மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.




கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கன்னியாகுமரி கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட நாகர்கோவில், கன்னியாகுமரி மற்றும் குளச்சல் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற புதிய கழக உறுப்பினர் சேர்க்கை செயலி குறித்த வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்களுக்கான (BDA) பயிற்சி கூட்டம் மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஆனந்த், ˙ரீதர் ரொட்ரிகோ, விஜயகதிரவன், எ.பாபு வினிபிரட், பா.பாபு, மோ.பிராங்கிளின், த.செல்வன், பி.சற்குருகண்ணன், ஆ.லிவிங்ஸ்டன், ஏ.சுரேந்திரகுமார், பி.எஸ்.பி.சந்திரா, ச.சுந்தர்சிங், என்.நாகூர்கான், குமரி ஸ்டீபன், இ.ஜவகர், த.ஜீவா, என்.பி.துரை, எம்.சேக்மீரான் உட்பட பேரூர் கழக செயலாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி BDA ஒருங்கிணைப்பாளர்கள் குமரி மணிமாறன், ஜெமிலா, தெய்வேந்திரன், BDA வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.